# தூதன்

தூதன்-27 அக்டோபர் 2018 தூது-9

**விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான். ரோமர் 1:17**

## SOLA GRATIA
fpUigapdhy; kl;LNk

## SOLA FIDE
tpRthrj;jpdhy;; kl;LNk

## SOLUS CHRISTUS
fpwp];Jtpdhy; kl;LNk

## SOLI DEO GLORIA
flTspd; kfpikf;fhf kl;LNk

## SOLA SCRIPTURA
jpUkiwahy; kl;LNk






Private Circulation only

தென் இந்திய திருச்சபை தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 04 |
| உதவி போதகர் மடல் – ஃபுஜைரா | 06 |
| உதவி ஆயரம்மா மடல் | 08 |
| உதவி போதகர் மடல் – இராஸ் அல் கைமா | 10 |
| உதவி ஆயரம்மா மடல் | 12 |
| செயலர் மடல் | 14 |
| Purification / Sanctification | 15 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 18 |
| குடும்ப வாழ்வின் மகிழ்ச்சி | 20 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 21 |
| திருச்சபை ஜெபநாள் | 22 |
| இலவங்க மரம் | 24 |
| வேதவினா போட்டி | 26 |
| தெரிந்து கொள்வோம் | 28 |
| Health Tips | 30 |
| Children's Corner | 32 |
| Birthday Celebrants | 34 |
| Wedding Anniversary | 38 |
| ஆராதனை பாடல்கள் | 39 |
| Shechem | 43 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae

# சபை போதகர் மடல்

ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் மாட்சிமை நிறைந்த திருப்பெயரில் என் உடன் விசுவாசக் குடும்பத்தார் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

மீண்டும் ஒரு புதிய மாதம், மீண்டும் ஒரு புதிய கிருபை, மீண்டும் ஒரு புதிய நம்பிக்கையுடன் இவ்வாண்டின் பத்தாம் மாதத்திற்குள் செல்கின்றோம். கடந்துவந்த நிமிடம் வரை நம்மைக் கரம்பிடித்து வழிநடத்திய அன்பின் ஆண்டவர் இப்புதிய மாதத்திலும் நம்முடன் வந்து நம்மைக் காப்பாராக.

இம்மாதத்திற்கான நம்பிக்கையின் இறைவசனம்

உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார். உபாகமம் 7:6

The Lord your God has chosen you out of all the peoples on the face of the earth to be his people, his treasure possession. Deut.7:6.

அனைத்து ஆற்றலும், மாட்சிமையும் நிறைந்த படைப்பின் ஆண்டவர், தாம் படைத்த மனுக்குலத்தின் அனைத்து இனங்களில் இருந்தும், எபிரேய மக்களை அதாவது இஸ்ராயேல் மக்களை தம் சொந்த மக்களினமாகத் தெரிந்துகொண்டார். அவர்களின் குல மூதாதையராகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் தலைமுறை வழியாக ஆண்டவரின் அருளும், ஆசியும், பாதுகாவலும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. இது இஸ்ராயேல் மக்களின் நீதியான வாழ்வின் காரணமாகவோ அல்லது அவர்தம் தூய்மையான வாழ்வினாலோ ஏற்பட்ட தெரிந்தெடுத்தல் அல்ல என்பதை உபா.7:6-26 இறைவசனங்களில் ஆண்டவர் வெளிப்படுத்துகிறார். இது முழுக்க முழுக்க தகுதியற்ற, சிறுபான்மை மக்களினத்தின் மீது ஆண்டவர் கொண்ட அன்பு. அவர்களின் மூதாதையர்களுக்கு கடவுள் தந்த வாக்குத்தத்தத்தின் அடிப்படையிலேயே தொடர்கின்றது என்பதை இதன்வழியே நாம் விளங்கிக்கொள்ள இயலும். இது எத்தகைய உறவு என்பதை இனி வரும் பகுதியில் நாம் காண்போம்.

1. இது உடன்படிக்கையின் உறவு (It's a Covenantal Relationship): கடவுள் இஸ்ராயேல் மக்களுடன் ஆபிரகாமின் வழியாக ஏற்படுத்திய உடன்படிக்கை மூலமாக கடவுள் வெளிப்படுத்திய அன்பின் நிமித்தமாக

கடவுள் அவர்களை தமக்குச் சொந்தமான, மக்களினமாகத் தெரிந்து கொண்டார். மனிதன் கடவுளுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையன்று. இது கடவுள் மனிதர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை. அதில் ஆண்டவர் உண்மையுள்ளவராயிருந்து மீண்டும், மீண்டும் அதைப் புதுப்பித்துக்கொண்டே இருக்கிறார். இந்த உடன்படிக்கையின் அன்பில் புதிய இஸ்ரவேலராகிய நம்மையும் ஆண்டவர் இயேசு ஒன்றிணைத்து வழிநடத்துகிறார். இந்த உடன்படிக்கையின் அன்பில் நாமும் தொடர்ந்து நிலைத்திருப்போம்.

2. இது தனி உரிமையுள்ள உறவு (It's a Prerogative Relationship): கடவுள் நம்மைத் தெரிந்துகொண்டார். நம்மோடு உடன்படிக்கை செய்து அந்த உடன்படிக்கையின் அன்பின் உறவில் நம்மைத் தொடர்ந்து வழிநடத்துகிறார் என்ற இந்த கிருபையின் அனுபவம் நமக்குப் பெற்றுத் தந்த மிக முக்கியமான ஆசீர்வாதம் என்னவென்றால், கடவுளுக்கும் நமக்கும் இடையிலே தகப்பன்-பிள்ளைகள் என்ற உணர்வுப்பூர்வமான உரிமையுள்ள உறவை நாம் பெற்றுக் கொள்கிறோம். அதைத்தான் தூய பவுலடிகளார் ரோமர் 8:14-17 இறைவசனங்களில் நமக்குக் கற்றுத் தருகிறார். இந்தத் தனி உரிமையுள்ள உறவில் கடவுளுடன் உறவாடி மகிழ்வோம்.

3. இது தொடருகின்ற உறவு (It's a Continuing Relationship): திருமறை நமக்குக் கற்றுத்தரும் உறவுகளில் உன்னத உறவு கடவுள் தாம் தெரிந்துகொண்ட மக்களினத்துடன் கொண்டுள்ள உறவு. இது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மட்டும், குறிப்பிட்ட குடும்பங்களுடன் மட்டும் வைத்துள்ள உறவு அல்ல. மாறாக தாம் முன் குறித்த மக்களினத்தோடு தலைமுறைதலைமுறையாய் தொடருகின்ற உறவு. ஆபிரகாமில் தொடங்கிய இந்த உன்னத உறவு தலைமுறைகளைக் கடந்து இன்று நம் தலைமுறைகளோடும் கிறிஸ்துவின் அன்பின் வழியாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்தத் தொடர்கின்ற உறவில் நாமும் தொடர்ந்து நிலைத்திருப்போம்.

ஆண்டவரின் அருளாசி நம் அனைவருடனும் தங்கியிருப்பதாக.

ஆண்டவரின் அருட்பணியில்<br>உங்கள் ஆயர்<br>அருள்திரு.ஆ.விக்டர் பிரேம்குமார்.

# ஆயிரம்மா மடல்

ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். கடவுளுடைய பெரிய கிருபையினால் 9 மாதங்களைக் கடக்க கடவுள் கிருபை செய்தார். இம்மட்டும் வழிநடத்திய தேவன் இனியும் வழிநடத்த அவர் வல்லவராய் இருக்கிறார்.

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும்,
காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. (எபி.11:1)

ஆகவே விசுவாசத்தைப் பற்றி இந்த பகுதியில் கற்றுக்கொள்வோம். விசுவாசிகளின் தகப்பன் என்று சொன்னால் நமக்கு ஆபிரகாம் தான் நினைவில் வருவார். ஆனால் அதற்கு அவர் அநேக போராட்டங்கள், சோதனைகள், பாடுகள், அவமானங்கள் எல்லாவற்றையும் தாண்டி இந்த பெயர் அவருக்குக் கொடுக்கப்பட்டது. இன்று நம்முடைய விசுவாசம் எந்த அளவில் உள்ளது. அதேவிதமான சோதனைகள், பாடுகள், அவமானங்கள் நம் வாழ்விலும் உண்டா? அதனை மேற்கொள்ளும் நம்பிக்கை நம்மிடத்தில் உண்டா? நம்மைப் பார்த்து கடவுள் என்ன சொல்லுவார்?!...

விசுவாசத்தின் அளவு நம் ஒவ்வொருவருடைய மனதுக்கும் தெரியும். வெளியில் விசுவாசிப்பவர்கள் போல காட்டிக் கொண்டாலும் உள்ளான உள்ளத்தை நம்மையும், கடவுளையும் தவிர வேறு யாரும் அறியமுடியாது. விசுவாசத்தில் நிலைத்திருந்து அதைத் தொடர்ந்து காத்துக்கொள்வது குறித்து மத்தேயு 25:1-13 திருமறைப் பகுதியில் புத்தியுள்ள கன்னிகைகள், புத்தியில்லா கன்னிகைகள் குறித்து ஆண்டவர் உவமையாகக் கூறுகிறார்.

1. புத்தியுள்ள கன்னிகைகள் மணவாளன் வருகைக்காக, எதிர்பார்த்து காத்து இருந்தனர்.
2. மணவாளனை எதிர்கொள்ள தங்களை ஆயத்தம் செய்கிறார்கள்.
3. மணவாளனுடன் செல்ல தங்களை தகுதிப்படுத்திக் கொண்டார்கள்.

### 1. மணவாளனின் வருகைக்காக, எதிர்பார்த்து காத்திருந்தார்கள் :

புத்தியுள்ள கன்னிகைகள் மணவாளனை எதிர்கொள்ள தகுந்த ஆயத்தத்தோடு காணப்பட்டனர். எப்படிப்பட்ட ஆயத்தம் :- தங்கள் எண்ணங்களில், செயல்களில், நடக்கையில், மணவாளனின் வருகையைக் குறித்த சிந்தனையோடும், ஆயத்தத்தோடும் காணப்பட்டனர்.

தன் வாழ்வில் எத்துணை பிரச்சனைகள், கஷ்டங்கள், சோர்வுகள் வந்தபோதும் கடவுளை விட்டு விலகாமல் இருந்து மணவாளனின் வருகைக்கு ஆயத்தப்பட்டனர்.

### 2. மணவாளனை எதிர்கொள்ள தங்களை ஆயத்தம் செய்கின்றார்கள் :

நாம் நம்முடைய பிள்ளைகளுக்குத் திருமண காரியங்கள் ஒழுங்காகிவிட்டால், ஒழுங்கான நாளில் இருந்து திருமணம் முடியும் வரை ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்து ஆயத்தம் செய்கிறோம். ஆனால் நாம் நம்முடைய நித்திய மணவாளனை எதிர்கொள்ள எவ்விதமான ஆயத்தங்கள் செய்கிறோம். புத்தியுள்ள கன்னிகைகள் மணவாளன் வர தாமதித்தாலும், அவர்கள் அதற்கும் தேவையான எண்ணெய் எடுத்து வந்தனர். இப்படிப்பட்ட ஒரு ஆயத்தம் நம்மிடம் காணப்படுகிறதா? என்று நம்மை ஆராய்ந்து பார்ப்போம்.

### 3. மணவாளனுடன் செல்ல தங்களைத் தகுதிப்படுத்திக் கொண்டார்கள்:

நாம் ஒருவரை வேலையில் சேர்க்கவேண்டும் என்றால் அவரிடம் அந்த வேலைக்குரிய தகுதி இருக்கிறதா என்று அவரை நேர்முகத் தேர்வின் மூலம் அவரிடம் கேள்விகள் கேட்டு அறிந்து கொள்வோம். ஆனால் சாதாரண இந்த உலகப்பிரகாரமான வேலையைச் செய்யப் போகிறதற்கே இவ்வளவு தகுதிகளைப் பார்த்து நாம் பணியில் அமர்த்துகிறோம்.ஆனால் நித்தியவீடு பரலோகத்தில் கடவுள் நம்மைச் சேர்ப்பதற்கு ஆண்டவர் எவ்வளவு தகுதிகளை நம்மிடம் எதிர்பார்ப்பார். ஆகவே மணவாளனாகிய இயேசு சீக்கிரம் வரப்போகிறார். புத்தியுள்ள கன்னிகைகளைப்போல ஆண்டவர் நமக்குக் கற்றுக்கொடுத்த ஆயத்தப்படிவங்களைக் கற்று அவரை எதிர்கொள்ள நாமும் ஆயத்தமாவோம். பிறரையும் ஆயத்தப்படுத்துவோம்.

தேவன்தாமே இந்த வார்த்தைகளையும் இந்த மாதத்தையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

இப்படிக்கு<br>கிறிஸ்துவின் பணியில்<br>உங்கள் ஆயரம்மா<br>மேரி விக்டர்.

## NEW ARRIVAL

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

Master Michael Charles

S/o.Dr.Prem James Charles & Dr.Jishi Ponraj

22-07-2018

# உதவி போதகர் மடல்

உன்மேல் கர்த்தர் உதிப்பார். ஏசாயா 60:2

உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியாகிய நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

இருள், மீட்டுக்கொள்ளப்பட்ட ஜனங்களின் வாழ்வையும், அவர்களின் உடைமைகளையும் எப்போதுமே குறி வைத்து வருகிறது (ஏசாயா 60:2). நம்பிக்கையில்லாத நிலைமைகள், குடும்ப உறவுகளில் வரும் குழப்பங்கள், கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பார்க்க முடியாத நிலைமைகள், நஷ்டங்கள், பாவங்கள், நமக்கு விரோதமாய் எழும்பும் பொல்லாத யோசனைகள், பிசாசுகளினால் வரும் போராட்டங்கள் போன்றவைகள் இருளுக்கு ஒப்புமையாக வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட இருளின் கிரியைகள் நம்மிடமுள்ள கொஞ்ச வெளிச்சத்தையும் போக்கி, கர்த்தருக்குள்ளான நம் சந்தோஷத்தைக் கொள்ளையாடி, வாழ்வின் நம்பிக்கையைக் குலைக்கும்படி வருகிறது. இவ்வித இருள் யோபுவையும், அவனுடைய உடைமைகளையும் குறிவைத்துத் தாக்கியது. ஆனால் யோபு கர்த்தரை விசுவாசித்ததால், அவன்மேல் கர்த்தர் உதித்து, அவனுக்கு இரட்டத்தனையான நன்மைகளைத் தந்தார். இம்மாதத்தில் நம் வாழ்வில் காணப்படும் இருளின் ஆதிக்கத்தை நீக்கி, நம்மேல் கர்த்தர் உதிப்பார். ஏனென்றால் "உதிப்பேன் என்றவர், நான் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறேன்" என்று அறிக்கையிட்டவரான நம் மீட்பர் இயேசுகிறிஸ்து.

## 1. தொலைந்து போகச் செய்யும் இருள் (ஏசாயா 60) :

ஏசாயா 56 முதல் 66 வரை பாபிலோன் சிறையிருப்பிலிருந்து விடுதலை பெற்ற இஸ்ரவேலருக்கு எழுதப்பட்டது. சிறையிருப்பிலிருந்து விடுதலை பெற்ற பின்னும், இருளின் விளைவுகள் அவர்களை விட்டு நீங்கவில்லை. இருளின் விளைவென்பது: தொலைந்து போகச் செய்யும் நிலைமையாகும். இஸ்ரவேலர்களை பாபிலோனின் அடிமைத்தன இருள் சூழ்ந்தபோது, அவர்கள் தங்கள் ராஜமகிமையையும் (வச.3,4), வாக்கு பண்ணப்பட்ட செழிப்பையும் (வச.6), அவர்களின் அலங்காரமான தேவாலயத்தின் மகிமையையும் இழந்தனர். இழந்துபோனவைகள் காலங்கள் பல உருண்டோடியும் தொலைந்து போனதாகவே இருந்தது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனமே "கர்த்தர் உன்மேல் உதிப்பார்." கர்த்தர் உதிக்கும்போது, தொலைந்துபோன எல்லாம், திரும்ப

அவர்களுக்குக் கர்த்தரால் உண்டாகும் என்பதே வாக்கு பண்ணப்பட்ட வெளிச்சம். இந்த வாக்குத்தத்தம், மேசியா வெளிப்பட்டபோது நிறைவேறியது (மத்.4:14-16). கிறிஸ்துவின் ஊழியத்தின்போது, இஸ்ரவேலர்கள் தாங்கள் தொலைத்த சுகவாழ்வை (லூக்கா 8:43), சமாதானத்தை (லூக்கா 7:50), விடுதலை வாழ்வை (லூக்கா 19:9), பார்வையைத் (லூக்கா 7:21,22) திரும்பவும் பெற்றுக்கொண்டார்கள். நாம் நம் வாழ்வில் எதை இழந்து போயிருக்கிறோம்: சந்தோஷமா? சமாதானமா? வேலையா? உடல் ஆரோக்கியமா? தொலைந்துபோனதைத் தேடிவந்த இயேசுகிறிஸ்து, இம்மாதத்தில் நம்மேல் உதிப்பார். அப்போது, இழந்தவைகளை மறுபடியும் பெற்றுக்கொள்வோம்.

### 2. பழைய அனுபவத்திற்குக் கொண்டு செல்லும் இருள் (யாத். 14):

இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்று, கானானை நோக்கி, பிரயாணம் பண்ணும்போது இருட்டிவிடுகிறது (14:20b). அந்த இருண்ட வேளையில், எகிப்தியர் இஸ்ரவேலரைத் தொடர்ந்து, அவர்களைப் பிடிக்கும்படி வந்தனர். எஜமான்களாய் வாழும்படி தேவன் அழைத்துச் சென்ற சுதந்தரவாளிகளான இஸ்ரவேலரைப் பிடித்து, அவர்களின் பழைய நிலைமையான அடிமைத்தன வேலைக்குத் திருப்பும்படி வந்தனர். இதைப்போலவே இரட்சிக்கப்பட்ட தேவபிள்ளைகளை, அவர்களின் பழைய நிலைமையான: பாவத்திற்கும், உலகத்திற்கும், மாம்சத்திற்கும் அடிமையாக்கும்படி, இருள் குறிவைக்கிறது.

தேவன் இஸ்ரவேலரைக் காக்கும்படி தம்முடைய தூதனை அனுப்பினார் (14:19). தூதனானவர் எகிப்தியருக்கும் - இஸ்ரவேலருக்கும் நடுநின்று, எகிப்தியர் இஸ்ரவேலரை நெருங்காதபடி காத்து, இஸ்ரவேலரின் இருளை வெளிச்சமாக்கினார் (வச.20). நம்மையும் காக்கும்படி, பிதாவாகிய தேவன், தம் சொந்த குமாரனை அனுப்பியிருக்கிறார். அனுப்பப்பட்டவரை விசுவாசிக்கும்போது, நம் இருளை வெளிச்சமாக்குவார், எந்த போராட்டமும், இடறலும் நம்மை மேற்கொண்டு, நம்மை பழைய நிலைக்குத் தள்ளாதபடிக்கு நம்மைக் காக்கும்படி நமக்காக நடுநிற்பார், எதுவும் நம்மை சேதப்படுத்தாது.

### 3. துக்கசெய்தி கொண்டு வரும் இருள் (எஸ்.4:3):

யூதரின் சத்துருவான ஆமான், யூதர்களையும், அவர்களின் உடைமைகளையும் அழிக்க நினைத்தான். அதற்காக பொல்லாத யோசனையொன்றை அவர்களுக்கு விரோதமாக யோசித்து, அந்த துர் ஆலோசனையை நிறைவேற்றும்படி ராஜாவின் உத்தரவையும் தந்திரமாய் பெற்றான். இந்த ராஜாவின் உத்தரவைக் கேள்விப்பட்ட யூதரின் குடும்பங்களைத் துக்கமாகிய இருள் மூடினது (4:3). அந்த சூழ்நிலையில்,

தேவன் எஸ்தர் என்னும் பரிந்து பேசுபவளை (advocate) யூதருக்காக எழுப்பினார். அப்போது துக்க இருள் உடைந்தது (8:16). வெளிச்சம் உதித்தது. பூர் என்னும் சட்டம் பூரீம் என்னும் பண்டிகையாக மாறினது.

நம் குடும்பத்தை எவ்வித துக்கம் மூடியிருக்கிறது: குடும்பத்திற்குள் ஏற்பட்ட துக்க நிகழ்வுகளால் உண்டான வருத்தமா? நம்முடைய வேலையையும், வாழ்வாதாரத்தையும் அழிக்க நினைக்கும் பொல்லாத மனுஷரின் சதி ஆலோசனையினால் உண்டான துக்கமா? நமக்காகப் பரிந்துபேசும் கிறிஸ்துவுண்டு. அவர் இருளின் அதிகாரத்தை உடைக்க வல்லமையுடையவர். துக்க இருளை மாற்றி கண்ணீரைக் களிப்பாக்குவார்.

இம்மாதத்தில் தேவன் நம்மை இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு நம்மை உட்படுத்துவாராக. ஆமென்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்,
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

**சிந்திக்க ஒரு சிறுகதை**

வெகுகாலத்திற்கு முன்பு, மிகவும் இரக்கமுள்ள ஒரு கிறிஸ்தவ வைத்தியர் இருந்தார். அவர் ஏழைகளைக் கரிசனையோடு கவனித்ததால், மிகவும் பிரசித்தி பெற்றவரானார். அவருடைய மருத்துவமனையில் எப்போதும், நீண்ட வரிசையில் மக்கள் காத்திருப்பர். அவருடைய பக்கத்து வீட்டிலிருந்த வியாபாரி, இயேசுகிறிஸ்துவை நம்பாதவராதலால், டாக்டர் ரூபஸ் மீது பொறாமை கொண்டு, பல தொல்லைகளைக் கொடுத்து வந்தார்.

ஆனால் டாக்டர் ரூபஸ், எப்போது அவரைப் பார்த்தாலும், புன்முறுவலோடு அவரிடம் கனிவுடனே நடந்துகொள்ளுவார். டாக்டர் ரூபஸ் எவ்வளவுக்கெவ்வளவு அன்பு காட்ட முயற்சி செய்தாரோ, அவ்வளவுக்கவ்வளவு சேகர் தன் எரிச்சலைக் காட்டினார்.

ஒருநாள் பிரயாணத்தின்போது ஏற்பட்ட accident-ல் சேகரின் மகன் பாலு காயப்பட்டான். அவனுக்கு இரத்தம் கொட்ட ஆரம்பித்ததால், வேறு வழியின்றி, சேகர் அவனைத் தூக்கிக்கொண்டு, டாக்டர் ரூபஸ் மருத்துவமனைக்கு ஓடினார்.

டாக்டர் உடனடியாய் ஒரு மேசையில் அவனைப்போட்டு பரிசோதித்தார். பாலுவுக்கு அவசரமாக இரத்தம் தேவைப்பட்டது. அவனது ரத்தம் பரிசோதிக்கப்பட்டதில் அது சுலபமாக கிடைக்கக்கூடாத ரகம் என்று கண்டுபிடிக்கப்பட்டது. டாக்டருக்கு தன் மகனது ரத்தம் அதே ரகம் எனத்தெரியும். உடனே தன் வாலிப மகனை அழைத்தனுப்பினார். அவனும் ஓடோடி வந்தான்.

பக்கத்திலேயே மகனைப் படுக்க வைத்தார். பில்லியின் இரத்தம், பாலுவின் இரத்த நாளங்களில் ஓடத் தொடங்கியது. இருவரது இரத்தத் துடிப்புகளையும் தாதியர் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். பாலுவைப் பார்த்துக்கொண்டிருந்த தாதி உற்சாகமாகக் கத்தினாள். டாக்டர், “பாலுவின் நாடித்துடிப்பு முன்னேறுகிறது. அவன் பிழைத்துக் கொள்ளுவான்” டாக்டர் சற்று புன்முறுவலித்தார்.

பில்லியைக் கவனித்துக்கொண்டிருந்த தாதி எச்சரித்தாள். “டாக்டர், உங்கள் மகனின் நாடித்துடிப்பு குறைகிறது” பொறு பொறு என்றார் டாக்டர் ரூபஸ். இன்னும் கொஞ்சம் இரத்தம் கொடுத்தால் பாலு கண்விழித்து விடுவான் என்று டாக்டர் தொடர்ந்தார். டாக்டர், பில்லியின் நாடித்துடிப்பு நின்றுவிட்டது என அலறினாள் தாதி. பாலு கண்களைத் திறந்தான். டாக்டர் பாலுவை தாதியரிடம் விட்டுவிட்டு கவனத்தைத் தன் மகன் பக்கமாய்த் திருப்பினார். ஆனால் பில்லி இறந்துவிட்டான்.

டாக்டர் ரூபஸைப் போல, தேவன், தனது ஒரே மகனாகிய இயேசு கிறிஸ்துவை நாம் வாழும்படியாகச் சாகக் கொடுத்தார். இயேசு கிறிஸ்துவின் இரத்தமே நமக்கு என்றென்றுமான வாழ்வைக் கொடுக்கிறது. நமக்கும் தேவனுக்கும் இடையிலிருந்த பிளவை இயேசுவின் மரணமே அகற்றி, நம்மைத் தேவனோடு இணைத்தது.

வேதவாசிப்புப் பகுதி : ரோமர் 5:7-11
மனப்பாட வசனம் : யோவான் 3:16

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி.ஃபர் ஆல்வின்,
உதவி ஆயரம்மா.

## அடைக்கலம் தரும் அரண்

திருமறைப்பாடம் : சங்கீதம் 48 - தியான வசனம் : சங்கீதம் 48:3

"அதின் அரமனைகளில் தேவன்
உயர்ந்த அடைக்கலமாக அறியப்பட்டிருக்கிறார்"
"God is in her citadels: he has shown himself to be her fortress".

இயேசு இரட்சகரின் இனிதான திருப்பெயரில் உங்களுக்கு புதிய மாதத்தின் வாழ்த்துக்கள் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன். புதிய மாதமாகிய அக்டோபர் மாதத்தில் கர்த்தர் நம் வாழ்விலும், திருச்சபை பணிவிடைகளிலும் அருள இருக்கும் நன்மைகளுக்காக நன்றி சொல்லுவோம்.

ஆண்டவரில் முழு நம்பிக்கை கொண்ட திருப்பாடகர் இயற்கையிலும், பிற நாட்டவராலும் இழைக்கப்படும் துன்பங்களுக்கு எதிராக இறைவன் தன் மக்களுக்கும், திரு நகரத்துக்கும் தரும் பாதுகாப்பை (அடைக்கலம்) விசுவாசக் கண்களால் கண்டு இறைவனைப் புகழ்ந்து பாடும் நம்பிக்கையின் பாடல் இவை.

இன்றைய உலகில் மக்களை அதிகம் பாதிப்பது பாதுகாப்பின்மையே. பொருளாதார நிலையிலும், உளவியல் தளத்திலும் பாதுகாப்பற்ற தன்மையே மிக அதிகமாகக் காணப்படுகிறது. இவ்வுலகில் கடவுள் மட்டுமே மேலான பாதுகாப்பைக் கொடுக்கமுடியும்.

### 1.ஆண்டவரின் பாதுகாவல் (சங்கீதம் 48:3):

திருப்பாடகரின் நம்பிக்கை கடவுள் நாம் வாழும் இடங்களில், இல்லங்களில் வாழ்கிறார், வீற்றிருக்கிறார் என்பதே. இருக்கின்றவராகவே வாழ்கிறார், வீற்றிருக்கிறார் என மோசேக்குத் திருக்காட்சி தந்த கடவுள் (யாத்.3:13) என்றென்றும் தம் மக்களுடனே வாழ்கிறார். தலைமுறை தலைமுறைதோறும் ஆளுகை செய்கிறார். அவர் மிகவும் பெரியவர் (சங்.48:1) மிகவும் துதிக்கப்படத்தக்கவர். தம் திருமைந்தர் இயேசு கிறிஸ்துவில் தம்மை உலகிற்கு வெளிப்படுத்தியவர் (எபி.1:1-9).

"தம்மையே உயர்ந்த அடைக்கலமாக காண்பித்துள்ளார்." (சங்கீதம்48:3)
திருநகர் எருசலேமைச் சுற்றிலும் கட்டப்பட்டிருந்த அரண் மக்களை எதிரிகளிடமிருந்து பாதுகாக்கப் பயன்பட்டது. கர்த்தர் அதற்கு மேலான அரணாக தம் மக்களை பாதுகாக்கிறார் என்னும் நம்பிக்கையை திருப்பாடகர் தருகிறார். திருநகரின் பாதுகாப்பு அந்நகரில் தங்கிடும் தேவபிரசன்னமேயாகும்.

தாவீதும் கற்பாறையாம் இறைவனை "ஆண்டவர் என் கற்பாறை, என் கோட்டை, என் மீட்பர், என் கடவுள், என் கேடகம், என் உயர்ந்த அடைக்கலம், என் புகலிடம், என் இரட்சகர்" (2 சாமுவேல் 22:2-3) என போற்றுகிறார். ஆம் மனிதனின் பாதுகாப்பு முழுமையற்றது. இறைவன் அருளும் பாதுகாப்பு முழுமையானது.

## 2. ஆண்டவரின் வழிநடத்துதல்:

"மரணபரியந்தம் நம்மை நடத்துவார்" (சங்கீதம் 48:14). வாழ்க்கைப் பயணத்தில் உடன் வாழும் உறவுகள் கூட நெருக்கடியான காலங்களில் பின்வாங்கிச் சென்றுவிடுவர். ஆனால் கர்த்தர் நம் வாழ்வின் இறுதிவரை நடத்துவார். வாழ்வில் சந்திக்கிற வியாதி, வறுமை, இழப்புகள் நடுவிலும் நம்பிக்கையுடன் வாழ துணைபுரிகிறார். நம்மை அழைத்தவர், தேர்ந்தெடுத்தவர் உண்மையுள்ளவர். தடைகளைத் தகர்த்தெறிந்து எதிராளிகளை முறியடித்து வெற்றிக்கு வழிநடத்துபவர். ஏனெனில் நாம் அவரின் பிள்ளைகள்.

"பிளவுண்ட மலையே, புகலிடம் தாருமே" என்ற பாடலை எழுதியவர் Rev. அகஸ்டஸ் டாப்லேடி (Augustus toplady) என்னும் போதகர் ஆவார். கிறிஸ்தவ திருப்பணி செய்த கிராமத்திலிருந்து மூன்று மைல் தூரத்தில் இயற்கை அழகு நிறைந்த ஒரு புல்வெளி இருந்தது. அதில் புதர்களும், பாறைகளும் உண்டு. போதகர் அடிக்கடி அங்கு நடந்து சென்று உலாவி வருவது வழக்கம். ஒருநாள் அங்கு சென்றிருக்கையில் திடீரென்று புயலோடு கூடிய மழை உண்டாயிற்று. ஒதுங்குவதற்கு வழியில்லாமல் அங்குமிங்கும் பார்க்கையில் அவர் ஒரு பெரிய பாறையில் செங்குத்தான ஒரு பிளவைக் கண்டு அதில் புயல் ஓயும் வரை ஒதுங்கினார். பத்திரமாகக் காக்கப்பட்டார். அப்போதுதான் "பிளவுண்ட மலையே புகலிடம் தாருமே" எனும் பாடல் உருவாயிற்று. ஆம் ஆண்டவர் நம் வாழ்வின் இறுதி வரை அரணாக இருக்கிறார்.

வாழ்க்கை என்பது இறைவன் வழங்கும் பெரும் பரிசு. வாழ்க்கையின் கடின சூழல் வேளையில் எல்லாம் கர்த்தர் நம்மோடு இருக்கிறார். அவர் வழி நடத்துகிறார், வழி நடத்தினார், பாதுகாக்கிறார், பாதுகாப்பார் என்ற நம்பிக்கையில் முன்னேறுவோம். அடைக்கலம் தரும் அரணான கர்த்தரிடம் உள்ளத்தைக் கொடுப்போம்.

அக்டோபர் மாதம் 26-ம் தேதி வெள்ளிக்கிழமை இராஸ் அல் கைமா திருச்சபையின் Harvest Festival ஆராதனையிலும், நிகழ்வுகளிலும் பங்கேற்க அன்புடன் அழைக்கின்றோம்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் திருப்பணியில்
Rev.M.Rajesh Kumar.
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

## நற்சான்று பெற்ற அபிகாயில்

**திருமறைப்பாடம் :** 1 சாமு.25:14-35 - **தியான வசனம் :** 1 சாமு.25:33

இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். ஆண்டவர் நம் வாழ்வில் அருளிய நன்மைகள் ஏராளம். சென்ற மாதத்தில் கர்த்தரின் நடத்துதலை எண்ணி அவரைத் துதிப்போம். புதிய மாதத்தில் புதிய தீர்மானங்களுடன் நாம் முன்னேறுவதற்கு கர்த்தர் துணைசெய்வாராக.

1 சாமு. 25:14-35 வரையுள்ள பகுதியில் கூறப்பட்டுள்ள அபிகாயில் தன் குடும்பத்தில் சிறந்த குணமுடைய பெண்மணியாக இருந்து குடும்பத்தை மகா அழிவிலிருந்து காப்பாற்றினாள். அதற்கு அபிகாயிலின் குணாதிசயங்கள் முக்கியமாகக் காணப்பட்டது. அந்த குணாதிசயங்களைத் திருமறையிலிருந்து காண்போம்.

### 1.ஞானத்துடன் விரைந்து செயல்பட்ட அபிகாயில் (1 சாமு. 25:18):

நாபாலின் மனைவியாகிய அபிகாயில் மகா புத்திசாலியும், ரூபவதியுமாயிருந்தாள் (1சாமு.25:18). ஒரு குடும்பத்தலைவி குடும்பத்தைச் சிறப்பாய்க் கட்டி எழுப்பவேண்டுமானால் புத்தி கூர்மையுடையவராக இருக்கவேண்டும். புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் (நீதி.14:1). இறைவன் பெண்களாகிய நம் கரத்தில் அழகிய குடும்பத்தைத் தருகிறார். நாம் அதைக் கட்டி எழுப்புகிறவர்களாக இருக்க வேண்டும்.

தாவீது, சவுல் ராஜாவுக்குப் பயந்து வனாந்தரத்தில் வாழ்ந்து கொண்டிருந்தபோது, நாபாலின் உதவியை நாடி வேலைக்காரரை அனுப்பினான். இதனால் கோபமடைந்த தாவீது, நாபாலின் குடும்பத்தை அழிக்கும்படி புறப்பட்டார். இந்த செய்தியைக் கேட்ட அபிகாயில் புத்திசாலித்தனமாகச் செயல்பட்டாள். வேலைக்காரன் செய்தியைக் கூறியவுடன் தன் குடும்பத்திற்கு வரும் தீங்கைத் தவிர்க்க துரிதமாய் அதாவது விரைந்து செயல்பட்டாள் (1 சாமு.25:18).

இருநூறு அப்பங்களையும், இரண்டு துருத்தி திராட்சை ரசத்தையும், சமைக்கப்பட்ட ஐந்து ஆடுகளையும், ஐந்துபடி வறுத்த பயிற்றையும், நூறுகுலை திராட்சைப்பழ வற்றலையும், இருநூறு அத்திப்பழ அடைகளையும் கழுதையின்மேல் ஏற்றி வேலைக்காரரிடம் நீங்கள் முன்னே போங்கள், நான் பின்னே வருகிறேன் என்று சொல்லி தாவீதைப் பார்க்க விரைவாகப் புறப்பட்டாள்.

### 2. தாழ்மையுடன் செயல்பட்ட அபிகாயில் (1 சாமு.25:23):

தாழ்மை உள்ளவர்களுக்குக் கர்த்தர் கிருபையளிக்கிறார். பெருமை உள்ளவர்களுக்குக் கர்த்தர் எதிர்த்து நிற்கிறார் என்ற திருமறை வார்த்தைக்கேற்ப சமாதானத்தை விரும்பிய அபிகாயில் தாவீதைக் கண்டவுடன் கழுதையை விட்டு இறங்கி தரையில் முகங்குப்புறக் குனிந்து அவர் பாதம் பணிந்து என் ஆண்டவனே, நீர் இரத்தம் சிந்தவரவும், உம்முடைய கை நீதியைச் சரிகட்டவும், கர்த்தர் உமக்கு இடம் கொடுக்கவில்லை என்பதை கர்த்ருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் எனக்கூறி தன் கணவர் செய்த தவறுக்காகத் தன்னை மன்னித்து, தான் கொண்டுவந்த பொருளை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனத் தாழ்மையுடன் வேண்டினாள். அவளுடைய வார்த்தைகள் தாவீதின் கோபத்தை மாற்றுமளவு சாந்தமாயும், தாழ்மையாயும் இருந்தது. வாளுடன் வந்த தாவீதைப் பணிவினால் அபிகாயில் வென்றுவிட்டாள்.

### 3. பழிவாங்கும் எண்ணத்தை முறியடித்த அபிகாயில் (1 சாமுவேல் 25:33):

பழிக்குப்பழி செய்யக்கூடாது என்று திருமறை எச்சரிக்கிறது. தாவீது தன் குடும்பத்தைப் பழிவாங்கும் எண்ணத்துடன் அழிக்க வருவதை அறிந்த அபிகாயில், தாவீதை பணிவான வார்த்தையினால் தடுத்து நிறுத்தினாள். என் ஆண்டவனுடைய ஆத்துமா உம்முடைய தேவனாகிய கர்த்தரின் ஆதரவில் இருக்கிறது. என் ஆண்டவராகிய நீர் பழிவாங்காமல் இருந்தால் உமக்கு துக்கமும் இராது, இடறலும் இராது என்று கூறினாள். அபிகாயிலின் வார்த்தையைக்கேட்ட தாவீது, நீ இன்றைய தினம் எனக்குத் தடை பண்ணினபடியால் நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாயாக என்று ஆசீர்வதித்தார் (1சாமுவேல் 25:33). மேலும் நீ சமாதானத்தோடே உன் வீட்டுக்குப்போ, நான் உன் சொல்லைக்கேட்டு உன் முகத்தைப் பார்த்து உன் குடும்பத்தை அழிப்பதில்லை எனக் கூறினான்.

குடும்பங்களில் பெண்கள் முக்கியமானவர்களாகவும், பொறுப்பானவர்களாகவும் காணப்படுகின்றனர். எல்லாச் சூழல்களிலும் ஆண்டவர் அருளும் ஞானத்துடன் பொறுப்புகளைச் சோர்வின்றி விரைவாக நிறைவேற்றும்போது சாதகமற்ற சூழ்நிலைகளிலும் நல்ல மகிழ்வையும், நல் உறவையும் ஏற்படுத்த இயலும். அதுமட்டுமன்றி இறை ஆசியையும் நாம் சுதந்தரித்துக் கொள்ளலாம். அபிகாயில் நற்சான்றுடன் செயல்பட்டதனால் கடின சூழல் மகிழ்வான சூழலாக மாறியது. நாம் இயேசு கிறிஸ்துவின் போதனைகளைத் தினமும் கைக்கொண்டு உறவுகளை வலுப்படுத்தி நற்சான்று பகர்ந்து வாழ கர்த்தர் அருள்புரிவாராக.

கிறிஸ்துவின் பணியில்
திருமதி J.விஜிலா ராணி
உதவி போதகரம்மா.

# செயலர் மடல்

நம்மை என்றும் மறவாத நம்முடைய தேவாதி தேவனின் நிகரற்ற நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

8-ம்தேதி வெள்ளிக்கிழமை ஆலய ஆராதனை, ஆசிரியர் தினத்தை நினைவு கூறும் சிறப்பு ஆராதனையாக நடைபெற்றது. இதில் நம் சபையின் ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். அவ்வாராதனைக்குப் பிறகு Junior Church-ன் 2nd Term ஆரம்பிக்கப்பட்டது.

15-ம்தேதி ஆலய ஆராதனையில் Sharjah CSI தமிழ் சபையின் போதகர் Rev.Ranjith Sudhir அவர்கள் செய்தி கொடுத்து ஆராதனையைச் சிறப்பித்து, நமது சபையாரை அவர்கள் சபையின் அறுவடைப் பண்டிகைக்கு வந்து பங்கேற்குமாறு அழைப்பு விடுத்தார்கள். அன்று Junior Church பிள்ளைகளுக்கு Memory Verse Contest நடத்தப்பட்டது.

22-ம் தேதி ஆலய ஆராதனையில் Umm Al Quwain CSI தமிழ் சபையின் போதகர் Rev.Jeba Vasagan அவர்கள் செய்தி கொடுத்து ஆராதனையை சிறப்பித்து, நமது சபையாரை அவர்கள் சபையின் அறுவடைப் பண்டிகைக்கு வந்து பங்கேற்குமாறு அழைப்பு விடுத்தார்கள். அன்று 10:30 மணியிலிருந்து மாலை 3:30 மணி வரைக்கும் JSS பள்ளியில் திருமணமாகி 10 வருடங்களுக்குள்ளான தம்பதியருக்கு ஒரு சிறப்புக் கூடுகை நடைபெற்றது. இதைச் சிறப்பாக நடத்திய நமது ஆயர் Rev.Victor Premkumar அவர்களுக்கு எனது நன்றிகள்.

23-ம்தேதி சனிக்கிழமை நமது சபைச் சிறார்களுக்குத் தமிழ் கற்றுக் கொடுக்கும் முயற்சியாக, தமிழ் வகுப்புகள் துவங்கப்பட்டது. சிறுவர்கள் உற்சாகத்தோடு பங்கு பெற்றனர்.

28-ம் தேதி தென்னிந்தியத் திருச்சபை உருவான தினத்தைக் கொண்டாடும் வண்ணமாக, நமது ஆயர் அவ்வாராதனையை சிறப்பு ஆராதனையாக நடத்தினார்கள்.

இவ்வருட அறுவடைப் பண்டிகை The First Harvest என்ற தலைப்பின் அடிப்படையில் கொண்டாட இருக்கிறோம். சபையார் இதற்காக ஜெபிக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்.

Jernaus Britto, Secretary.

Continued...

Let us now discuss on the three principles by which we can sanctify ourselves. These are the 3 "P"s of sanctification:

1. Purged / Purified
2. Polished
3. Proven

PURGED / PURIFIED:

Let me just point out the difference between to be purged and purified. Although both words come from similar roots and are often used synonymously, there is a big difference. To purge something is to focus deep into the root and getting rid of the problem or sin. To Purify is to cleanse it from the surface. This can be illustrated by a skin disease. If we have a severe skin disease, which we are not able to get rid of, even after taking several lotions; physician would advise us to do the following:

1. To have an antibiotic. Taking this tablet or tonic goes and touches the cells living deep inside our body or the blood and cleanses them. This is Purging. Purifying our filthy thoughts.

2. To apply a lotion over the body/skin where the diseases are spread which will purify our outward skin. This is purification. Correcting our actions or change in our character.

The focus is on the result not the cause. Essentially, purging and purifying accomplish the same thing. But the focus is the important part. David, when he understood that he is being fallen and impure, he pleaded God to purify him. He did not roam around pleading the prophets, pastors or the evangelists to pray for his sanctification. He straight away called up on the Lord for His help. Ps.51:6 purge me with hyssop, and I shall be clean: As we read earlier, Holy Spirit can only purge us by His blood. Heb. 9:13-14 For if the blood of bulls and of goats, and the ashes of an heifer sprinkling the unclean, sanctifieth to the purifying of the flesh: How much more shall the blood of Christ, who through the eternal Spirit offered himself without spot to God, purge your conscience from dead works to serve the living God?

Hyssop is a common herb which grew in Bible times and still grows extensively today in many varieties all over the world. It's possible you have seen it in a garden near you. Common varieties grow to about two feet tall and spread about a foot. It has beautiful purple blue flowers and a strong mint smell. If you have ever seen or grown catmint, hyssop looks somewhat similar. In "the old days" - before grocery store shelves were lined with cleaning products for every conceivable need, people used nature's products. Hyssop was readily available, especially in the Middle East. Because it had detergent properties, it was widely used to clean sacred places such as temples.

Here are some times it was used in the Bible:

A bunch of hyssop was used to dip in the basin of blood of the Passover lamb to apply to the lintel and doorpost before the Israelites left Egypt. (Exodus 12:22) Since hyssop has strong woody stalks it could stand up to being shaken.

Cleansing ceremony for a leper in Leviticus 14:1-8. Again, hyssop was the dipping agent into blood of a bird and used to sprinkle over the unclean person.

In John 19:29, it was used at the crucifixion. "Now a vessel full of sour wine was sitting there; and they filled a sponge with sour wine, put it on hyssop, and put it to His mouth."

Are you disturbed and discouraged by the sin which has deep rooted within your heart? Don't look within and get discouraged. But look above and get encouraged. Confess all your sins before the cross and you will be purged by the blood of Jesus Christ. Don't ever try to hide your sins. I Jn. 1:7 say ..... and the blood of Jesus Christ his Son cleanseth us from all sin. If we say that we have no sin, we deceive ourselves, and the truth is not in us. If we confess our sins, he is faithful and just to forgive us our sins, and to cleanse us from all unrighteousness.

POLISHED:

Sanctification is a kind of separation. It would be easier to understand this by an illustration: process of purification of gold. After the gold is being purified, the pure gold is separated from the filthy ones. Then it's being sent to the next process for polishing. Like-wise, we are also being separated by God to fulfill His will on this earth. Ps. 4:3 But know that the LORD hath set apart him that is godly for himself. Normally the dirt doesn't stick on to a highly polished material. It's also easier to identify the dirt which is on a polished material.

God polishes us with His word every day, so that we may be able to wipe out even a small filthiness which is seen in our day-to-day life. In the New Testament, there are 21 lists of sins with a total of 202 sins of which 103 are different. Bible warns us to keep ourselves out of all these sins so that we may be pure in the sight of God all the time. Ps. 119:9 Where withal shall a young man cleanse his way? by taking heed thereto according to thy word. The word reveals the sin; the blood cleanses it away; result is sanctification. Let us polish our life like the Psalmist everyday with the Word of God. Every day Meditation on the Word of God and Private Prayer is a must for every Christian.

## PROVEN:

Hands should match our heart. i.e. our actions should match our thoughts. We as Purged/Purified and Polished child of God should be able to keep the holiness all through the days of our life for His Name sake. Fullness of Sanctification is accomplished only when we keep our hearts pure till the end of our life on this earth. God will definitely help us to keep His commandments if we seek Him whole heartedly. I Thes. 5:23 And the very God of peace sanctify you wholly; and I pray God your whole spirit and soul and body be preserved blameless unto the coming of our Lord Jesus Christ. If we do that, some day we will be completely holy without one grace missing; mature and perfect. The wonderful experience will be ours when Christ comes and our body is changed/transformed. Live a pure life and prove the world that you are being sanctified by His blood. Sanctification guarantees us an inheritance beyond the grave. Woodrow Kroll says: Those who keep God's word will be faithfully kept. Resist devil and he will flee from you (Jas 4:7). Dr. Griffith Thomas says, Holiness is not an achievement to be accomplished, but a Gift to be accepted. The constant use of this gift will increase our sanctification. We got to show the world that we can live a sanctified life with the help of the Holy Spirit. Then God will one day say unto us well done, good and faithful servant; thou hast been faithful over a few things, I will make thee ruler over many things: enter thou into the joy of thy lord. Shall we surrender our body, soul and mind in to His Mighty hands, confess all our deep rooted hidden sins, sanctify ourselves and be ready to receive Him in His second coming with His Glory and Might.

It's not the External but the Internal which affects the Eternal.

God Bless You.

மேலும் பேயோர், “யாக்கோபு பதாம்ஆரானுக்கு தன் தாயின் சகோதரனாகிய லாபானின் வீட்டிற்கு சென்று, தந்திரமாக அவரது மகள்களையும், அவரது மந்தையையும் மற்றும் அவரது உடமைகளையும் எடுத்துக்கொண்டு கானானுக்குத் திரும்பினார்.

அவரது குமாரர் தங்கள் சகோதரனை எகிப்திற்கு விற்றுப் போட்டார்கள். அவர் அங்கே பன்னிரண்டு ஆண்டுகளாக அடிமையாகச் சிறையில் இருந்தார். முந்தைய பார்வோனின் சொப்பனங்களை விளக்கிக்கூறும் வரைக்கும், சிறையில் இருந்தவர், சிறையிலிருந்து வெளியே கொண்டுவரப்பட்டு, எகிப்தின் எல்லாப் பிரபுக்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டார்.

கர்த்தர் தேசத்தில் பஞ்சத்தை வருவித்தப்போது அவர் தனது தகப்பனையும், தனது சகோதரரையும், மற்றும் முழுக்குடும்பத்தையும் வரவழைத்து அவர்களைக் கிரயமில்லாமல் ஆதரித்து, எகிப்திய அடிமைகளையும் வாங்கியிருந்தார்.

ஆகையால் ராஜாவே, தாங்கள் இப்பொழுதே இவனது இரத்தத்தைத் தரையிலே சிந்திவிடும். ஏனெனில் அவன் வளர்ந்து தங்களது ராஜ்ய பாரத்தை உங்களிடமிருந்து எடுத்து எகிப்தின் நம்பிக்கையையே அழித்துவிடுவான்” என்றான்.

பின்பும் பாலாம் பார்வோனை நோக்கி, “நாம் எகிப்திலுள்ள எல்லா நீதிபதிகளையும், ஞானிகளையும் வரவழைத்து, இக்குழந்தையின் குற்றத்திற்குரிய தீர்ப்பைக் கூறி, அவனைக் கொன்று விடுவோம்” என்றான். பார்வோனுக்கு யோசனை நன்றாய்பட, உடனே எகிப்திலுள்ள எல்லா ஞானிகளும் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் வந்து பார்வோனுக்கு முன்பாக நின்றார்கள். என்னே அதிசயம்! தேவனுடைய தூதனானவரும் எகிப்தின் ஞானிகளுள் ஒருவராக, அவர்களோடு வந்து பார்வோனுக்கு முன்பாக நின்றார்.

பார்வோன் அவர்களை நோக்கி, “இந்த எபிரெயக் குழந்தை செய்தவற்றை கேள்விப்பட்டிருப்பீர்கள். அதற்கு பாலாம் கூறிய பதிலும் இதுதான். நீங்கள் இக்குழந்தைக்கு என்ன தீர்ப்பு செய்வீர்கள்?” என்று கேட்டான். ஞானிகளுள் ஒருவராக வந்த தேவதூதனானவர், “பார்வோனுக்கு சம்மதியானால் அவர் ஆட்களை அனுப்பி, “ஓனிக்ஸ்” என்று அழைக்கப்படும் கல்லையும், கரிநெருப்பையும் கொண்டுவந்து இக்குழந்தைக்கு முன்பாக வைக்கவேண்டும்.



இக்குழந்தை தனது கையை நீட்டி அக்கல்லை எடுத்தால், இவன் தன்னுடைய ஞானத்தோடு எல்லாம் செய்திருக்கிறான் என்று இவனை கொலை செய்துவிடலாம்.



இவன் தனது கையை நீட்டி கரிநெருப்பை எடுத்தால், இவன் தன்னுடைய ஞானத்தோடு செய்யவில்லை என புரிந்துக்கொண்டு இவனை விட்டுவிடலாம்.

இந்த யோசனை பார்வோன் உட்பட எல்லா பிரபுக்களுக்கும் நன்றாகப் படவே, தேவதூதனானவரின் யோசனைக்கு அனைவரும் உட்பட்டனர்.

உடனே பார்வோன் ஓனிக்ஸ் எனப்படும் விலையுயர்ந்த இரத்தினக் கல்லையும், கரிநெருப்பையும் கொண்டுவரக் கட்டளையிட்டான். அவைகள் கொண்டுவரப்பட்டு குழந்தையான மோசேக்கு முன்பாக வைக்கப்பட்டது. மோசே தன் கையை நீட்டி கல்லை எடுக்க முயற்சித்தபோது தேவனுடைய தூதனானவர் அவர் கையை கரிநெருப்பை தொடும்படி செய்து, அவரது கையைத் தூக்கி அவர் அதை தன் வாயினில் போட்டுகொள்ளும்படிச் செய்தார். அது மோசேயின் வாயினில் பட்டு அவரது உதடுகள், மற்றும் அவரது நாக்கு தீயினால் காயப்பட்டுப்போனது.

இதைக்கண்ட பார்வோனும் அவரது உடன் இருந்த அனைவரும், குழந்தை அறியாமல் பார்வோனின் தலையின் மகுடத்தை எடுத்திருக்கிறான் எனப் புரிந்துகொண்டு அவனைக் கொலைசெய்யும் எண்ணத்தை விட்டுவிட்டனர். எனவே மோசே பார்வோனின் வீட்டிலேயே வளரவும் தொடங்கினார். தேவன் அவரோடேகூட இருந்தார். தொடரும்...

நன்றி:யாசேரின் புத்தகம்.

தமிழாக்கம்: ஷீபா ரெஜினால்ட்

## வருந்துகிறோம்

**"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"**

நமது சபையின் அங்கத்தினர்
Mrs.Leelabai Balan அவர்களின் அத்தை
Mr.T.Eswarakani அவர்கள் 02-09-2018 அன்று
நித்திரை அடைந்துள்ளார்கள்.

# குடும்ப வாழ்வின் மகிழ்ச்சி

உலகுக்குத் தலைவன் இறைவன்
ஒருத்திக்குத் தலைவன் கணவன்
கலகமிலா உலகுக்கு சகிப்பு
குடும்ப வாழ்வுக்கு அன்பு

நம்பும் தாங்கும் சகிக்கும்
அன்றும் இன்றும் என்றும்
உம்மில் நம்மில் துளிர்க்கும்
அன்பு அன்பு அன்பு !

செய்தியில் கண்ணாய்க் கணவன்
செய்கையில் களிக்கும் சிறுவன்
வைத்த பானம் அவர்முன்
இடறி உடைத்தான் இளம்மகன்

உடைந்த குரலில் அம்மா
உருகும் உணர்வில் மூவரும்
கொடுத்தனர் தன்குற்ற வாக்குமூலம்
கேட்டனர் மன்னிப்பு ஒருமுகம்

தன்குற்றம் உணர வேண்டும்
தன்னுணர்வும் நல்மனம் மனச்சாட்சியும்
இன்முகத்தில் ஏற்றது குடும்பம்
இழப்பிலும் தந்தது பாடம்

அன்பு நிறைந்த குடும்பம்
ஆனந்தம் விளைந்த சொர்க்கம்
அனைவரும் உணர்ந்தார் லேசாய்மனம்
அன்பால் உண்மை இன்பம் !

ஆதாரம் : 1 கொரிந்தியர் 13:7, ரோமர் 8,9,10
கவிதை எண் : 211.
கவி புனைவு : மணிமுத்து.

# நீங்கள் கிறிஸ்தவரா...

அவர் பூமியின்மேல் மழையை வருஷிக்கப்பண்ணி, வெளிநிலங்களின் மேல் தண்ணீர்களை வருவிக்கிறார். யோபு 5:11

சென்ற மாத தொடர்ச்சி...
மனிதரை
கருவாக்கி
உருவாக்கிய
கர்த்தரே...
மனிதனுக்காக
இயற்கை வளம்
அத்தனையும்
படைத்தார்
மனிதனின்...
கொடுமையை
கேளுங்க...
இயற்கையை
மெல்ல மெல்ல
அழித்து
ஒழித்து
அட்டூழியம்
செய்யும்போது
மழை...
எங்கே வரும்..
மண் வளம்
எப்படி வரும்
வறட்சிதானே வரும்.
வானம் பார்த்த
பூமியென்றாகிவிடும்.
வல்லரசு
நாடுகள்
நாளுக்கு நாள்
ஆயுதங்கள்
அனேகம் செய்து
அதனை விற்பனை
செய்து... பணம்
குவிக்கலாம்
உலகையே
அச்சுறுத்தலாம்
யோசிச்சுப் பாருங்க
விவசாய விளைச்சல்
இல்லாது போனால்
உணவுப் பொருட்கள்
உற்பத்தி
இல்லாது போனால்
உணவுக்கு எங்கே
போவோம்...
உயிர் வாழ
என்ன செய்வோம்...
இயற்கை மழை
என்பார்கள்
தண்ணீர் கொட்டோ
கொட்டுமென்பார்கள்
இதுதான் விஞ்ஞானம்
காட்டும் வித்தை
என்பார்கள்
சரிதானுங்க
யானைப் பசிக்கு
சோளப்பொரி
பரிகாரமாகுமா?
உலகில்
மெய்ஞானம்
இல்லாது போனால்
மனித வித்தைகள்
செல்லாது
போகும்தானே...
படைத்த கர்த்தரை
மறந்துவிடும்போது
விபரீதம் விரைந்து
வந்துவிடும்தானே...
நம்மை
நல்வழி நடத்தும்
புனித பைபிள்
வசனம் பார்ப்போம்.
"நீதியுள்ளவர் மேலும்
அநீதியுள்ளவர்
மேலும்
மழையை
பெய்யப்
பண்ணுகிறார்"
நல்லோர்க்கு
பெய்யும் மழை
எல்லோர்க்கும்
உண்டு
சான்றோர் வாக்கு
கர்த்தர்
பூமியை
வளமாக்க
மனிதரை
வாழவைக்க
பூமியின் மேல்
மழையை
வரவைப்பார்.
எனவே நிலங்கள்
விளைநிலமாகும்
மரம் செடி
கொடிகளுடன்
காடும் செழிக்கும்
நாடும் செழிக்கும்
நல் வாழ்வால்
இல்லம் மகிழும்
"கர்த்தரால்
ஆகாதது என்று
ஒன்றுமேயில்லை
கண்டுகொள் மனிதா
கர்த்தரை
துதித்துக்கொள்
மனிதா..."

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# திருச்சபை ஜெபநாள் 07-10-2018 (முதல் ஞாயிறு)

"கர்த்தாவே, என் வார்த்தைகளுக்குச் செவிகொடும்,
என் தியானத்தைக் கவனியும்." சங்கீதம் 5:1

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- Junior Church Memory Verse Contest, இளம் தம்பதியருக்கான சிறப்புக் கூடுகை யாவும் சிறப்பாக நடந்தேற கர்த்தர் பாராட்டின கிருபைகளுக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
